Reg'sered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

-9 JUN 1971
UNDERGRADUATE LIBRARY

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோரப்பரேஷன

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்:389

இடமாற்றம்

13, ஜும்மா மொஸ்க் ஒழுங்கையிலுள்ள எமது ஸ்தாபனம் "28, பஸார் ஒழுங்கை" என்ற விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்

றேடியோ
இன்ஜியரிங் வேக்ஸ்
(உரிமை: சாமினி குணசேகர)
28, பஸார் ஒழுங்கை - யாழ்ப்பாணம்.
(பஸ்விசாலுக்கு பக்கத்தில்)

மலர் 13 வைகாசி 23 ரபிஉல்ஆகிர் 12 (6—6—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 114

# வீடு கட்டுவதற்கு மேலும் ரூபா 5கோடி 50லட்சம் கடன்

## அரசாங்கம் வழங்கும்

கோட்டை; சனி

வீடு கட்ட மேலும் 5 கோடியே 50 லட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப் படவிருக்கிறது. வீடமைப்பு அமைச்சின் மூலமாக இந்தக் கடன் உதவி வழங்கப்படும்.

1970ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னதாகக் கடனுக்கு விண்ணப்பித்தவர்களுக்கே இந்தக் கடன் இப்போது வழங்கப்படுகின்றது.

இதற்கு முன்னதாக 648 விண்ணப்பதாரருக்கு 70 லட்சம் ரூபாய் வீடு கட்டுவதற்குக் கடனாக வழங்கப்பட்டது.

தமது சொந்தப்பாவிப்புக்காகவோ, அல்லது பிள்ளைகளின் பாவிப்புக்காகவோ வீடு கட்ட கடனுக்கு விண்ணப்பித்தவர்களுக்கே இக்கடனுதவி வழங்கப்படுகிறது.

மாதம் 1500ரூபாய்க்கு கூடுதலாகச் சம்பளம் பெறுவோருக்கு இந்தக்கடனுதவி வழங்கப்படமாட்டாது.

800 ரூபாய்க்கும் 1500 ரூபாய்க்கும் இடையில் சம்பளம் எடுப்பவர்களுக்கு 32 சத வீதமும் 800க்கு குறைவாக சம்பளம் எடுப்பவர்களுக்கு 25சத விகிதமும் கழிக்கப்படும்.

இரண்டாயிரம் ரூபாய்க்கு குறைவாக வீடுகட்ட கடனுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

25 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக விண்ணப்பிப்பவர்கள் 1200 சதுர அடிக்குள் வீடுகட்ட வேண்டும்.

## தடை தளர்த்தப்பட்டது

கோட்டை, சனி

நாடு சகஜநிலைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு விதித்திருந்த தடையைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தளர்த்தியுள்ளார்.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள், கூட்டுஸ்தாபன, பல்கலைக்கழக ஊழியர்கள் ஆகியோருக்கு நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு அரசாங்கம் தடை விதித்திருந்தது தெரிந்ததே.

பிரதமரின் நிரந்தரச் செயலாளர் திரு எம் டி டி பீரிஸ் சகல அரசாங்க திணைக்களங்களின் தலைவர்களுக்கும் நிரந்தரச் செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் மேற்கண்ட தகவலை அறிவித்துள்ளார்.

## வைத்திய நிபுணர்கள் இடமாற்றத்துக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து வைத்திய நிபுணர்கள் இடமாற்றத்திற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.

காலியாகும் இடங்களுக்கு வேறு வைத்திய நிபுணர்களை நியமிக்கும் வரை, இங்குள்ள வைத்திய நிபுணர்களை இடமாற்றம் செய்யக் கூடாதென யாழ் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா சுகாதார அமைச்சரைக் கேட்டிருக்கிறார்.

ஆஸ்பத்திரி கமிட்டி தலைவர் டாக்டர் பிலிப்பும் வைத்திய நிபுணர்களின் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் 3 வைத்திய நிபுணர்களுக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்திருப்பதாக தெரியவருகிறது.

பயங்கரவாதிகளுக்கு

## விமானத்திலிருந்து மீண்டும் உருக்கமான அழைப்பு!

கோட்டை, சனி

பயங்கரவாதிகள் மீண்டும் ஒரு தடவை விமானத்திலிருந்து கனிவுநிறைந்த உருக்கமான அழைப்பைப் பெறப் போகிறார்கள்.

இரண்டு லட்சம் துண்டுப் பிரசுரங்கள் இவர்களுக்காக தயாராகி, விமானத்திலிருந்து வீசப்படவிருக்கிறது.

பயங்கரவாதிகள் சரணடைவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் தொடர்பான ஏற்பாடுகள் இப்போது பூர்த்தியாகியுள்ளன.

இம்மாதம் 7ம், 8ம், 9ம் திகதிகளில் பயங்கரவாதிகள் சரணடைய இப்போது கடைசிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நேற்றுக் கொழும்பில் அரசாங்க அதிபர்கள், மாவட்ட இணைப்பு அதிகாரிகள் கொண்ட மகாநாடு ஒன்று நடந்தது. இதன்முடிவில் பயங்கரவாதிகள் சரணடைவது தொடர்பான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

இந்த மூன்று நாட்களும் சரணடைபவர்களுக்குவழங்கப்படும் சலுகைகள் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விமானத்திலிருந்து வீசுவ

(6-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி கல்லூரி

## அதிபர்கள் இடமாற்றத்தில் மேலும் சில மாறுதல்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதிக் கல்லூரி அதிபர்கள் சிலரின் இடமாற்றங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. முன்னர் வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவுகளில் சில மாறுதல்களும் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மத்தியகல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு. சிவஞானம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. சிவசுப்பிரமணியம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் இடமாற்றங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பதில் அதிபராக திரு. மகாதேவா தொடர்ந்தும் கடமையாற்றுவார்.

யாழ் இந்துக் கல்லூரி பதில் அதிபர் திரு. எம். கார்த்திகேசன் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கும் அங்கு இப்போது அதிபராகக் கடமையாற்றும் திரு. ஈ. கே. சண்முகநாதன் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடமாற்றமும் செய்யப்பட்டுள்ளனர்.

ஊரடங்கும் நேரம்

இன்று மாலை 7-30 முதல் நாளை காலை 4-30 வரை

யாழ்ப்பாண

## நவீன மார்க்கட்டை தபால் மந்திரி இன்று பார்வையிடுவார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் யாழ்ப்பாணம் நவீன மார்க்கட்டைப் பார்வையிடுவதற்காக இன்று யாழ்ப்பாணம் வருகிறார். அமைச்சர் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்குவார். இன்று காலை அமைச்சர், யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மற்றும் சபை உறுப்பினர்களுடன் சென்று நவீன மார்க்கட்டைப் பார்வையிடுவார். அமைச்சர் பொறியியலாளர் என்ற ரீதியில் தமது ஆலோசனைகளை வழங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது

மஜாராஜட்ட உறுப்பினர் திரு. கே தெய்வேந்திரன் மார்க்கட்டைப் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கும்படி விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அமைச்சர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்

நாளை காலை அமைச்சர் வட பகுதி சுதந்திரக்கட்சிக் கிளைகளின் நிர்வாகிகளைச் சந்தித்து உரையாடுவார். யாழ். சுதந்திரக்கட்சிக் கிளை உறுப்பினர்களும் அமைச்சரை சந்திப்பார்கள்

மாணவர்களுக்கு

ஒரு நற்செய்தி!

இம்மாதம் 9-ம் திகதி ஈழநாடு பத்திரிகையுடன் புதிய பாடசாலைநேர (6 நாட்கொண்ட) அட்டவணை இலவசமாக உங்களுக்குக் கிடைக்கவிருக்கிறது. இது,
'மில்க்வைற்' — 'ஈழநாடு'
ஸ்தாபனத்தார்
உங்களுக்குச் சேர்ந்தளிக்கும் அன்பளிப்பு!
கூடுதல் பிரதிகள் விரும்பும் பத்திரிகை விற்பனையாளர்கள் இன்றே தொடர்பு கொள்ளவும்.
நிர்வாகி
'ஈழநாடு'

## வரி விளம்பரம்

### நன்றி நவிலல்

27-5-71-ல் நடந்த எமது திருமண வைபவத்திலும், 29-5-71-ல் நடந்த வரவேற்பு வைபவத்திலும் கலந்து கொண்டு எம்மை ஆசீர்வதித்து மகிழ்வித்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். திரு. ஏ. தேவராசா, திருமதி இன்பராசனி தேவராசா. 3161

### விற்பனைக்கு

1 ஸ்ரீ 5000 தொடர் இலக்க போட் பிறிவெக்ட் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. வ. சிவஞான சுந்தரம் சரசாலை புலோலி தெற்கு. 3153

காணி:

பெரியகடை, பெரியால் பத்தினி. பெரிய பாடசாலைகளுக்கு அண்மையில் 7 பரப்பு நீண்டமதில் எல்லை தென்னை பனைவுடன், வீடு கட்ட உகந்தது. பிரித்தும் விற்கப்படும். 217/4 கடைச்சாமி வீதி வண்ணார் பண்ணை. 3158

### தேவை

தெல்லிப்பழையில் விஞ்ஞான, கணித பாடங்களில் தனியார் வகுப்புகள் நடத்த ஆசிரியர்கள் உடனே தேவை. தே. து. ஜெயரத்தினம், தெல்லிப்பழை. 3149

### வாடகைக்கு

அறைகள்:

வியாபார சூழல், தொழில் செய்யவோ சாமான் ஸ்டோர் பண்ணி வைக்கவோ, தனிநபர்கள் தங்கவோ வசதியுள்ளது. இல:3 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 3159

### வேறொருஇடத்தில் பாடசாலை

பொலனறுவை, சனி

பொலநறுவ மகாவித்தியாலயம் வேறொரு இடத்தில் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதியில் உள்ள பொருட்களை உடனடியாக வந்து பெற்றுக் கொள்ளுமாறு மாணவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். அதிபரையும், ஆசிரியர்களையும் பிராந்திய கல்வி அதிபதியைச் சந்திக்கும்படி பொலநறுவ இணைப்பு அதிகாரி அறிவித்துள்ளார்.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி காலை10-00 பி.ப.2-00

சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த

ராமன் எத்தனை ராமனடி

ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-30க்கும் பி. ப. 2-00 மணிக்கும்

எம்.ஜி.ஆர். — பானுமதி

நடித்த

மலைக்கள்ளன்

(புதிய கொப்பி)

வின்ஸர்— யாழ்ப்பாணம் காலை 10-30 பி.ப. 2-00

★ சிவாஜி கணேசன் ★ பத்மினி

நம்பியார் — சுந்தரராஜன் — தங்கவேலு

ஜெயலலிதா — மனோரமா

நடித்த

குருதட்சணை

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-30 பி. ப. 2-00 மணி

★ ஜெய்சங்கர்

★ வாணிஸ்ரீ

★ லக்ஷ்மி

நடித்த

கன்னிப் பெண்

கெப்பிட்டல்

காலை 10, பி.ப.2-00 மணி

எங்கவீட்டுப் பிள்ளை

ஸிக்ஸ்லி

காலை 10, பி.ப.2-00 மணி

நீதிக்குப்பின் பாசம்

ஜமலன்

காலை 10, பி.ப.2-00 மணி

நான்

பிளாஸா

காலை 10, பி.ப.2-00 மணி

எங்கவீட்டுப் பிள்ளை


### சுன்னாகம் பட்டண சபை கேள்விக்கான அறிவித்தல்

சுன்னாகம் பட்டணசபைத் தலைவரால் சுன்னாகம் பல்தரிப்பு நிலையத்திற்கு முன்னால் அமைந்திருக்கும் இரண்டு கடைகள் தனித்தனியாக வாடகைக்குக் கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் 12-6-71 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு முன்பதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

கூடுதலான வாடகை குறித்துக் கேள்விப்பத்திரங்கள் அனுப்புபவர்களுக்குக் கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென தலைவரால் அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் மூன்று மாத வாடகை முற்பணத்தையும் கட்டி ஒப்பந்தத்தையும் முடித்துக்கொள்ள வேண்டும். தவறின் அவருடைய கேள்வி நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

எக் கேள்வியையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு

வேண்டிய விபரங்கள் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்

பொ. நாகலிங்கம்
தலைவர்
பட்டணசபை சுன்னாகம்

பட்டணசபை அலுவலகம்
சுன்னாகம், 3-6-1971
2828

கோட்டை, சனி

நேற்று மேலும் பல பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. எப்பிட்டிய தலைவர் டபிள்யூ. டி. சோமபலா, தெனியாய தலைவர் ஜெயதிச ஆகியோர் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.


நாகஸ்சினிமா

சுன்னாகம்

தினசரி

காலை10 30, பி. ப 2-30

ஜெமினி—விஜயகுமாரி

நடித்த

பொற்சிலை

ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி

காலை10 30, பி.ப 1-30

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

நடித்த

தாயைக்காத்த தனயன்

வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 10-30 பி ப 2-30

ரங்கராவ்- அஞ்சலிதேவி

நடித்த

பக்த பிரகலதா

மனோகரா

(யாழ்ப்பாணம்)

Daily 4-30 p m. Only

Thomas Hunter

in

HILLS RUN RED

காலை 10-30 பி.ப. 2-00

காந்தாராவ்-ராஜசுலோசனா

நடித்த

பாட்டி சொன்ன கதை

REGAL (Jaffna)

Daily 10-30 a m 2-00 &

4-15 p. m.

A LITTLE JUNGLE BOY


### கிராமாட்சி மன்றம் நீர்வேலி கேள்வி விளம்பரம்

1971-ம் வருடம் யூன் மாதம் 16-ம் திகதி முற்பகல் 10-30 மணி வரை மேற்படி கிராமாட்சி மன்ற நிர்வாகஸ்தரால் கீழ்க்கூறப்படும் வேலைகளுக்கு பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

வேலைகளின் விபரங்கள்

(1) கிராமாட்சிமன்றக் கட்டிட விஸ்தரிப்பு

(2) ஞானவைரவர் கோவில் வீதி (கல் பதித்து தார் ஊற்றுதல்)

இக்கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப் பணமாக ரூபாய் 50/-ம் பத்திரப்பணம் ரூபாய்10/-ம் செலுத்தியதன் பேரில் யூன் மாதம் 12-ம் திகதி முற்பகல் 11-30 மணிவரையும் நிர்வாகஸ்தரால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் யாவும் தயாரிக்கப்பட்டு மேற்கூறப்பட்ட முடிவுதிகதிக்குள் நிர்வாகஸ்தருக்கும் அதன் பிரதி உ. உ. அதிபருக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல்வேண்டும்.

எந்த ஒரு கேள்வியையும் ஏற்கவோ அல்லாதுவிடில் நிராகரிக்கவோ நிர்வாகஸ்தருக்குப் பூரண உரிமையுண்டு. ஏனைய விபரங்கள் வேண்டின் தேரில் இச்சந்தோரிலோ அல்லாதுவிடில் உள்ளூராட்சி உதவி அதிபரின் கந்தோரிலோ கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளவும்.

நிர்வாகஸ்தர்
கிராமாட்சிமன்றம்
நீர்வேலி

கிராமாட்சி மன்றம்
நீர்வேலி. 4-6-1971
2829

### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 223-ம் இலக்கக் கடையில் சோம. மு. இராமநாதன் அவர்களிடம் 1-1-68 முதல் 31-12-68 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவற்றை 28-6-71 திங்கட்கிழமை முற்பகல் பத்துமணிதொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மு. இராமநாதன்,
ஏல விற்பனவாளர்.

2827


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


### தினமும் 100,000 பைந்து பால்கொள்வனவு

கோட்டை, சனி

இன்னும் மூன்று வாரங்களில்தேசிய பாற்சபை நாளாந்தம் மேலும் 100,000 பைந்து பால் கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது.

இத்தகவலை தேசிய பாற்சபைத் தலைவர் திரு. எம். பி. சம்மான் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

இவ்வாறு நாளாந்தம் 100,000 பைந்து பால் கொள்வனவு செய்வதன் மூலம் உள்நாட்டுப் பாற்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கவும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்படும் பாலுணவுகளின் அந்நிய செலாவணியை மீதப்படுத்தவும் முடியும் என்றும் பால் சபைத்தலைவர் கூறியிருக்கிறார்.

—...

### 'பொலிசார் சிரமதானத்திலும் ஈடுபடவேண்டும்'

களனி, சனி

பொலிசார் தமது கடமையைச் செய்வதோடு, சிரமதானவேலைகளிலும், சமய சம்பந்தமான கொண்டாட்டங்களிலும், கிராமமுன்னேற்றமான வேலைகளிலும் ஈடுபடவேண்டும் என்று ஹெந்தலை பட்டினசபைத் தலைவர் திரு. ஏ. டி. வி. பெரேரா வத்தளைப்பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. புஜித குணவர்த்தனவின் பிரிவுபசார விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு புஜித குணவர்த்தன கடந்த ஐந்து வருடங்களாக வத்தளைப்பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டராக கடமையாற்றினர்.

......

### ஹோமியோபதி பரீட்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

தபால் மூலம் இங்கும், இந்தியாவிலும் ஹோமியோபதி பயின்ற மாணவர்களுக்கு ஆகஸ்ட்மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடைபெறவிருக்கிறது.

தமிழ்நாட்டில், கும்பகோணத்திலும், மற்றும் இடங்களிலும் ஹோமியோபதிபயின்று வந்த இலங்கை மாணவர்களும் இப்பரீட்சையில் தோற்ற விருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோமியோபதி கல்லூரியில் மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### அறிவித்தல்

#### சீமேந்து விநியோகம்

1-6-71 தொடக்கம், 25 பைகளுக்கு மேற் தேவைப்படுவோர், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமேந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய விண்ணப்பப்படிவம், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் ரூபா 1/-க்குக் கிடைக்கும். ஒரு பை சீமேந்தின் தற்போதைய தொழிற்சாலை விலை ரூபா 10/50

25 பைகள் வரை தேவைப்படுவோர், பிரிவுக் காரியாதிகாரியின் (D. R. O) சிபாரிசுடன் அண்மையிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களில் தங்கள் தேவைகளைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பிரான்சிஸ்,
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை,
30-5-1971.

# கிழக்கு வங்காள அகதிகளுக்கு சர்வதேச வைத்திய உதவிகள் குவிகின்றன

## ஐ. நா. உதவி பற்றி யாஹ்யா பேச்சுவார்த்தை

புதுடில்லி ஜூன் 5
காலரா நோயினுல் பாதிக்கப்பட்டுள்ள பாரதத்திலுள்ள கிழக்கு வங்காள அகதிகளுக்கு பல உலக நாடுகளிலும் சர்வதேச ஸ்தாபனங்களும் வைத்திய உதவி அளிக்க முன் வந்துள்ளன. பெருந்தொகையான காலரா நோய் தடுப்பு ஊசிமருந்துகள் விரைவில் விமான மூலம் பாரதம் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

உலக கத்தோலிக்க ஸ்தாபனம் ஒன்று 6 லட்சம் டோஸ் மருந்துகளை விமான மூலம் அனுப்பிவைக்க விருப்பதாக அறிவித்துள்ளது. பிரான்சிலுள்ள வைத்திய சேவை ஸ்தாபனம் இரண்டரை லட்சம் டோஸ் ஊசி மருந்துகளை வழங்க முன்வந்துள்ளது.

ஜெனிவா செஞ்சிலுவை சங்க லீக் தடுப்பு ஊசி மருந்துகளை விமானத்தில் அனுப்பியுள்ளதாக அறிவித்துள்ளது. உலக சுகாதார ஸ்தாபனமும் வைத்திய உதவி வழங்கியுள்ளது.

பிரிட்டிஷ் உலக நிறுவனம் ஒன்று 16 லட்சம் டோஸ் மருந்துகளை அனுப்பவுள்ளது. அவுஸ்திரேலிய செயர்ஸ்தாபனம் 12 பேர் கொண்ட வைத்திய பிரிவு ஒன்றை கல்கத்தாவுக்கு அனுப்பவுள்ளது. இந்தப் பன்னிரண்டு பேரில் இருவர் கிழக்கு வங்காள மாகாண சட்டசபை உறுப்பினர்களாவர்.

இது இவ்வாறிருக்க கிழக்கு வங்காளத்திலிருந்து பாரத எல்லைக்கு வரும் அகதிகளின் பெருந்தொகையானோர் பாரதத்துக்கு வந்தவுடனேயே மாண்டுவிடுவதாக லோகசபையில் நேற்றுக் கூறப்பட்டது. பசிக்கொடுமையினுல் இவர்கள் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் அகதிகளுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டுள்ளது என்றும் லோகசபையில் கேள்வி நேரத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

எல்லைப்புறத்தில் விடுதலைவீரருக்கும் பாகிஸ்தான் துருப்புகளுக்குமிடையே நேற்று உக்கிரமான தாக்குதல் நடைபெற்றுள்ளதாக எல்லையிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் கூறின. விடுதலை வீரர்கள் கொமில்லா ஜில்லாவில் 30 இராணுவத்தினரைக் கொன்று பல வண்டிகளையும் ஆயுதங்களையும் தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் மனிதத்தன்மையற்ற கொடுமைகள் பற்றிய செய்திகள் தொடர்ந்து கிடைத்தவண்ணமாயிருப்பதாக பாரதத்திலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் கூறின 2 கிராமங்களை பாகிஸ்தான் துருப்புக்கள் அழித்துவிட்டதாக செய்திகள் தெரிவித்தன.

### 988 அகதிகள்

988 அகதிகள் ரயில்பூரிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மானாவுக்குப் புறப்பட்டுள்ளதாகவும் மானாவில் தற்காலிக முகாம் ஒன்று அமைக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

### யாஹ்யா - ஐ. நா. பேச்சுவார்த்தை

பாகிஸ்தான் அதிபர் யாக்யாகான் கிழக்கு வங்காளத்திற்கு ஐ நா வழங்கவிருக்கும் உதவிகள்பற்றி ஐ நா அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். ஐ நா உதவி எந்தவிதத்தில் அமையவேண்டும் என்பது பற்றி யாஹ்யாகான் பேசியதாகத்தெரிகிறது

### கனடா மேலும் நிதி உதவி

ஒட்டாவா ஜூன் 5
கிழக்கு வங்காள அகதிகளுக்காக பாரதத்துக்கு மேலும் நிதி உதவி வழங்குவதுபற்றி கனடா பரிசீலனை செய்து வருவதாக கனடா பிரதமமந்திரி திரு ட்ரூடோ பார்லிமெண்டில் கூறியிருக்கிருர்.

---

### விமானம் கடத்தல்

வாஷிங்டன், ஜூன் 5
அமெரிக்கவிமானமொன்று திசைதிருப்பிச் செல்லப்பட்டுள்ளது. 66 பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த இந்தவிமானத்தை இஸ்ரேலுக்குக் கடத்திச்செல்ல முயற்சிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது

---

ஐ. நா: பொதுச் செயலாளர் பதவி

# இலங்கைப் பிரதிநிதிக்கு கூடுதல் வாய்ப்புண்டாம்

நியூயோர்க், ஜூன் 5
ஐ. நா பொதுச்செயலாளர் பதவிக்கான போட்டியில் இலங்கைப் பிரதிநிதி திரு சேர்லி அமரசிங்கா முன்னணி வகிப்பதாக ஏஜென்சி செய்திகள்கூறின. உலக நாடுகளின் ராஜதந்திரிகள் இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளனர்.

பொதுச்செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் பின்லாந்து பிரதிநிதியிலும்பார்க்க இலங்கைப்பிரதிநிதியான திரு. அமரசிங்கா முன்னணி வகிப்பதாகக் கூறப்படுகிறது பொதுச்செயலாளர் பதவியிலிருந்து யூதாண்ட் விலகிக் கொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டபோது திரு. அமரசிங்காவின் பெயரே மும்முரமாக அடிபட்ட போதிலும். பின்லாந்து தூதவரும் இப்பதவிக்கு போட்டியிட அபேட்சகர் பத்திரத்தைதாக்கல் செய்திருந்தது பின்லாந்து அபேட்சகரின் பெயரே உலகநாடுகளில் அடிபடத் தொடங்கியது இப் பதவிக்கு ஆஸ்திரியா தூதுவரும், எதியோப்பியா தூதுவரும் போட்டியிட முன்வந்ததைத் தொடர்ந்து இலங்கைப் பிரதிநிதியின் பெயரே இப்போது பரவலாக பேசப்பட்டுவருகிறது. ரஷ்யாவும் இலங்கைப் பிரதிநிதிக்கே தனது ஆதரவைக் கொடுக்கவிருப்பதாகவும் தகவல் தெரிந்த வட்டாரங்கள் கூறின, இவ்வருட இறுதியில் திரு யூதாண்ட் பதவியிலிருந்து விலகியதும், திரு அமரசிங்கா பொதுச்செயலாளர் பதவிக்கு வரும் வாய்ப்பு பெருமளவு இருப்பதாக அந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

---

கிழக்கு வங்காள நிலைமை குறித்து

# ஆறு உலக நாடுகளுடன் பாரதம் பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஜூன் 5
கிழக்கு எல்லையில் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டுவரும் பாக்கிஸ்தான் துருப்புக்களின் நடவடிக்கைகள்பற்றி ஆறு உலக நாடுகளுக்கு எடுத்துவிளக்குவதற்காக பாரத வெளியுறவு மந்திரி திரு சுவர்ண்சிங் இன்று மாலை புதுடில்லியிலிருந்து புறப்படவிருக்கிருர்.

சோவியத்யூனியன், மேற்கு ஜெர்மனி, கனடா, பிரான்ஸ், அமெரிக்கா. பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு இரண்டு வாரகால விஜயத்தை இவர் மேற்கொள்ளுவார்.

கிழக்கு வங்காளத்திலிருந்து பாரதத்துக்குவரும் அகதிகளினுல் பாரதத்துக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து வெளியுறவு மந்திரி அந்நாட்டு அரசாங்க தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

கிழக்கு எல்லையில் நடைபெற்றுவரும் போரினுல், பாரத பிராந்தியத்தின் அமைதிக்கு இருந்துவரும் இன்னல்கள் பற்றியும் திரு சுவர்ண்சிங் எடுத்துக் கூறுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வெளியுறவு அமைச்சர் நாடு திரும்பியதும் இன்னுமொரு அமைச்சர் ஜப்பானிய அரசாங்கத்துக்கு கிழக்கு வங்காள அகதிகள்பற்றி விளக்குவதற்காக ஜப்பான் செல்லுவார் என்றும் கூறப்பட்டது.

### பிரிட்டிஷ் கருத்தரங்கில் ஈழத்துப் பெண்மணி

லண்டன், ஜூன். 5
கைத்தொழில் விவகாரங்கள், தொழில் அளிப்புமுறைகள் சம்பந்தமாக தற்சமயம் பிரிட்டனில் நடைபெறும் சர்வதேச கருத்தரங்கொன்றில் இலங்கைப் பெண்மணி ஒருவர் பங்குபற்றி வருகிருர்.

இவர்தான் செல்வி சந்திரா விக்ரமசிங்கா. கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் பொருளாதாரத்துறையில் உயர் பட்டதாரிப் படிப்பை மேற்கொண்டு வரும் இவர் இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டிருக்கிருர். தென் இங்கிலாந்தைச் சேர்ந்த பிரைட்டன் நகரில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, மத்திய கிழக்கு, ஐரோப்பா ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த அரசாங்க தொழில் அதிகாரிகள், கைத் தொழில் நிர்வாகிகள், மற்றும் நிபுணர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றுகிருர்கள்.

செல்வி விக்ரமசிங்கா 1964ம் ஆண்டிலிருந்து பேராதனை சர்வகலாசாலையின்பொருளாதார போதனு பீடத்தில் ஒரு விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிருர். 1968ம் ஆண்டில் கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் உயர் பட்டதாரிப் படிப்பை மேற்கொண்ட இவர் இப்பொழுது தமது இறுதி வருடப் பயிற்சியில் இருக்கிருர்.

கி. பசி நிலைமை

### உணவுக்குக்கூட மனமில்லையாம்

புதுடில்லி, ஜூன் 5
கிழக்குவங்காளத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனக்கொலை உலக அமைதிக்கு பேரிழப்பாகும். என்று ஆச்சார்ய வினுேபாபாவே கூறியிருக்கிருர்.

அங்குநடக்கும் இரத்தக் களரியை நினைக்கும்போது, அன்றாட உணவைக்கூட உண்ணமுடியாமலிருப்பதாக வினுேபாபாவே கூறியிருக்கிருர்.

### உபகாரநிதி பெற்ற இலங்கை டாக்டர்கள்

லண்டன், ஜூன். 5
கொழும்புத் திட்டத்தின் தொழில்நுட்ப கூட்டுறவு அமைப்பின் கீழ் பிரிட்டனில் உயர்பட்டதாரிப் படிப்பை மேற்கொள்வதற்காக இலங்கை வைத்தியர்கள் இருவருக்கு உபகாரநிதிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. டாக்டர் எம். என். ஹனிபா, டாக்டர் கே. சி. ஜே டேனியல் ஆகிய இவ்விருவரும் இரத்தவியல் துறையில் உயர் கல்விபயில்வதற்காக சென்றவாரம் பிரிட்டனுக்குச் சென்றுள்ளார்கள்.

எடின்பேர்க் நகரிலுள்ள ரோயல் வைத்தியசாலையில் இருவரும் பயிற்சியை மேற்கொள்வார்கள்.

# பாடசாலை விடுமுறைகள் 14 வாரங்களாக அதிகரிக்கும்!

### கல்வி அமைச்சர் தகவல்

கோட்டை, சனி
வாரத்துக்கு 6 நாட் பாடசாலை என்ற திட்டத்தை அமுல் நடத்துவதற்குரிய தமது நோக்கம் பற்றி கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மாமூத் விளக்கியிருக்கிருர்.

கிராமப்புற மாணவர்கள் தனிப்பட்ட போதனு வசதிகளைப் பெறமுடியாததினுல் மிகவும் பாதிக்கப்படுவதாகவும் இப்பகுதி மாணவர்கள் அதிக நேர போதனையைப் பெறவாய்ப்பளிக்கு முகமாக வாரத்தில் 6 நாட்கள் பாடசாலையை நடாத்த தாம் முடிவுசெய்ததாகவும் அமைச்சர் கூறினுர்.

தம்மை பேட்டிகண்ட ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கமத் தூதுக்குழுவினரிடம் அமைச்சர்இவ்வாறுகூறினுர். அமைச்சர் மேலும் கூறியுள்ளதாவது:-

கிராமப்புற மாணவர்கள் பண வசதியின்மையால் தனிப்பட்ட போதனைகளை பெற முடியாமல் கஷ்டப்படுகிருர்கள். இவர்களின் நன்மையைக் கருதித்தான் கொண்டே இவ்வித நடவடிக்கையை எடுத்தேன்.

வருடாந்த விடுமுறை நாட்களை 9 வாரங்களிலிருந்து 14 வாரங்களாக்குவது பற்றி ஆலோசித்து வருகிறேன். இதனுல் மாணவர்களும், ஆசிரியர்களும் அறுவடையிலும் சூடு மிதிப்பதிலும் ஈடுபடமுடியும் சிங்கள ஆங்கில ஆசிரியர்களின் சம்பளத்திலுள்ள வித்தியாசத்தை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

---

### இருவர் தெரிவு

அம்பன், சனி
இனிதொரசிசிகமத்தொழில் பாடசாலைக்கு அம்பன் இளம் விவசாயிகள் கழகத்திலிருந்து திரு. ந. அரசரத்தினமும், ந. பத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கமத்தொழில் பாடசாலை இம்மாதம் ஆரம்பமாகவிருக்கின்றது.

# பருத்தித்துறையில் பனங்கட்டி உற்பத்தி

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள பொலிகண்டி, சந்தாதோட்டம் என்னும் இடங்களிலும் உடுப்பிட்டியிலுள்ள இலந்தைக் காடு தென் புலோலி ஆகிய இடங்களிலும் பனங்கட்டித் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்து வருகின்றன. நவீன விஞ்ஞான கருவிகளுடன் உற்பத்தி செய்யப்படவிருக்கும் இப் பனங்கட்டி அதிக அளவில் கிடைக்கும்பட்சத்தில் இப் பகுதிகளில் சீனி உபயோகம் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பருத்தித்துறை உடுப்பிட்டி எம்.பி.க்களான திருவாளர்கள் க. துரைரத்தினமும், க. ஜெயக்கொடியும் இத் தொழிலுக்கு அரசாங்க மானியம் பெறுவதுபற்றி ஆலோசித்து வருகின்றனர்.

# கைத்தொழில் அமைச்சுக்கு 1 கோடி 20 லட்சம் நஷ்டம்

கோட்டை, சனி

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சுக்கு கடந்த 2 மாதங்களாக சுமார் 1 கோடியே 20 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளினால் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சுக்குச் சொந்தமான உடைமைகளுக்கு 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் தலைதூக்கியிருந்த காலத்தில் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சியினால் 1 கோடியே 15 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடைமைகளை பழுதுபார்ப்பதிலும், உற்பத்தி வீழ்ச்சியை நிவர்த்தி செய்வதிலும் அமைச்சு ஈடுபட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

வற்றாப்பளை அம்மன்

# பொங்கல் உற்சவம் நாளை பகல் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வற்றாப்பளை அம்மன் கோவில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் சம்பந்தமாக இம்முறை விசேஷ ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். சிவஞானம் தலைமையில் முல்லைத்தீவு காரியாதிகாரி அலுவலகத்தில் நடந்த ஒரு மாநாட்டில் ஊரடங்கு உத்தரவு அமுலிலிருப்பதை யொட்டி பொங்கல் உற்சவத்தை பின்வருமாறு நடாத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இம் மாதம் 7ந் திகதி அதாவது நாளை திங்கட்கிழமை பொங்கல் விழா நடைபெறுகிறது. காலை 6 மணிக்கும் மாலை 6 மணிக்குமிடையில் பொங்கல் உற்சவம் நடைபெறும். அந்தப்பகுதி யாத்திரிகர்கள் ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு வருவதற்கு முன்னர் தங்கள் வீடுகளுக்குத் திரும்புமாறு கேட்கப்படுவார்கள்.

ஊரடங்கு நேரத்துக்கு முதல் வீடுகளுக்குத் திரும்ப முடியாத வெளியூர் யாத்திரிகர்கள் ஆலய முகாமக்களில் அன்றிரவு தங்கியிருந்து அடுத்த நாள் காலை புறப்பட்டுச்செல்ல அனுமதியளிக்கப்படுவர்,

ஆலய முகாம் எல்லைக்குள் அன்றிரவு முழுவதும் கடைகளைத் திறந்திருக்க அனுமதி வழங்கப்படும். ஆலய முகாம் எல்லைக்கு வெளியே எவரும் செல்ல முடியாது.

ஊரடங்கு உத்தரவு நேரத்தில் ஆலய முகாம் எல்லைக்குள்ளிருந்து எவரும் செல்லாதபடி பொலிசார் பார்த்துக் கொள்வர்.

## வரவேற்பளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெடுந்தீவைச் சேர்ந்த திரு. சந்திரா பேக்மன்ஸ் கிராம அபிவிருத்தி அதிகாரியாக வெளி இடங்களில் கடமையாற்றி தற்பொழுது தமது சொந்த ஊராகிய நெடுந்தீவிற்கு மாற்றலாகி வந்ததையிட்டு நெடுந்தீவு மக்கள் அவருக்கு ஒரு சிறந்த வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்துவருகின்றனர்.

—

பண்டிதைக்கு வேலணையில்வரவேற்பு

வேலணை சனி

மலேசியா சென்று சொற்பொழிவாற்றி ஈழம் திரும்பியுள்ள பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வேலணையில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது. இம்மாதம் 8-ம் திகதி வேலணை நாவலர் மடம் ஸ்ரீநடராசப் பெருமான் சந்நிதானத்தில் இவ்வரவேற்பு உபசாரணை விழா நடைபெறவுள்ளது. ஊர்காவற்றுறை ஆட்சி மன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ் விழா ஒழுங்குகளை திரு. செல்லப்பாசாமியார் செய்து வருகிறார்.

## துலாக்காவடி எடுப்பார்

காவிட்டபுரம், சனி

குரும்பசிட்டி அம்பாள் ஆலய விசாகப்பொங்கல் இம்மாதம் 7-ம் திகதி நடைபெறவிருக்கிறது. குரும்பசிட்டியைச் சேர்ந்த அ. இந்துதாசன் என்பவர் அன்றையதினம் துலாக்காவடி எடுத்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றவுள்ளார். முன்னர் இவர் நல்லைக்கந்தன் ஆலயத்திற்குப் பறவைக்காவடி எடுத்து நேர்த்தியை நிறைவேற்றியவர்.

## பக்தி அவசியம்

தாவடி, சனி

"அன்பர்கள் கருதும் வடிவங்களெல்லாம் தாங்கிக் கொண்டு முன்னிற்கும் தன்மையுடையவன் இறைவன் பார்க்குமிடமெங்கும் மொழுநீக்கமற நிறைந்திருப்பவனை நாம் சிந்தையில் கொண்டு உய்ய பக்தி அவசியமாகும்."

இவ்வாறு தாவடி சைவ இளைஞர் மன்றத்தைச் சேர்ந்தவரும், ஸ்ரீகணேச நாடக மன்றச்செயலாளருமான திரு. சபா. கனகநாயகம் கொக்குவிலில் நடந்தசமயக் கருத்தரங் கொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 23-ந் திகதி

(6-6-71)

மேஷம்- காதலருக்கு மனகுஷியான தினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

ரிஷபம்- பணவிடயத்தில் அதிக சிக்கனத்தை கடைப்பிடிக்கவும். எதிர்பாராத பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்- உங்கள் நடவடிக்கைகளில் தனிச்சிறப்பு தென்படும். தொழில்துறையில் பொதுசனத் தொகைக்கும் இடமுண்டு.

கடகம்- வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும்.

சிம்மம்- குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ளக் கூடும், திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும்.

கன்னி- எக்கருமத்தையும் எண்ணி துணிச்சல், அவசரப்போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும்,

துலாம்- மனம்நிறைந்த வாழ்வு, மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விருச்சிகம்- ஆணவப் போக்கு அடிசறுக்கவைக்கும். பின்னணியில் மோசடி வேலை நடக்கும் மேலதிகாரிகளின் கழுகுப் பார்வை உங்களை வட்டமிடலாம்.

தனுசு- அறிவுப் பணியில் அதிக ஆர்வம் பிறக்கும், ஆராய்ச்சியாளருக்கு புதிய துப்புகள் கிடைக்கலாம்.

மகரம்- உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு.

கும்பம்- எதிர்பார்த்த முடிவில் ஏமாற்றம் தென்படும். உடன்பிறந்தவர்களாலேயே பல தொல்லைகள் தோன்றக்கூடும்.

மீனம்- நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சகாக்களுடன்சச்சரவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இளைப்பாறிய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்

கோட்டை, சனி

ஆங்கில ஆசிரியர்களாக பதிவு செய்யவிரும்பும் இளைப்பாறிய ஆசிரியர்களிடமிருந்தும், ஆங்கில தராதரம் பெற்ற தனிப்பட்டவர்களிடமிருந்தும் கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கல்வி அமைச்சில் பதிவு செய்யவிரும்புவோர் இம் மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் பிரதம கல்வி அதிகாரி, ஆங்கிலப்பிரிவு கல்விஇலாகா, மலேவீதி கொழும்பு-2 என்ற விலாசத்துக்கு பதிவு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்

பாடசாலைகளில் மேலும் பல ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கான திட்டத்தின் முதல் நடவடிக்கையாக இது இடம்பெறுகிறது.

பல்கலைக்கழக

# விஞ்ஞான போதனுபீடங்கள் ஜூலை மாதத்தில் ஆரம்பம்!

கோட்டை, சனி

பல்கலைக்கழக விஞ்ஞான போதனு பீடங்கள் ஜூலை மாதத்தில் மீண்டும் ஆரம்பமாகவிருக்கிறது. கல்வி அமைச்சு நேற்று விடுத்த அறிவித்தலின் பிரகாரம் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான போதனுபீடம் ஜூலைமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும். ஏனைய போதனுபீடங்கள் ஜூலை 16-ம்திகதி ஆரம்பமாகும்.

பேராதனை பல்கலைக்கழக உயிரியல், பௌதிக போதனு பீடங்கள் ஜூலைமாதம்16-ம் திகதியும், வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களின் விஞ்ஞான பீடம் ஜூலை மாதம் 31-ம் திகதியும் ஆரம்பமாகும்.

## ஹோம சாந்தி

மாவிட்டபுரம், சனி

கடந்த வியாழனன்று நிகழ்ந்த சனி மாற்றத்தை யொட்டி சனீஸ்வரனால் பாதிக்கப்படும் மக்கள் சாந்தி பெறும் வகையில் கீரிமலை நகுலேஸ்வரன் கோவிலில் அன்று தினம் நவக்கிரக ஹோமம் நடைபெற்றது.

ஆலயகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் ஹோமக் கிரியைகளை நடத்திவைத்தார். ஏராளமான மக்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தனர். இவ் வைபவத்தை யடுத்து அருட்கவி சி. விநாசித்தம்பி 'நகுலேஸ்வரரும் சனீஸ்வரரும்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

## புதிய நியமனம்

ரோம் ஜூன் 5

வத்திக்கானிலுள்ள விசுவாசம் பரப்புதல் சபையில் இணைச் செயலாளர்களாகக் கடமையாற்ற ஆபிரிக்காவிலும் ஆசியாவிலுமிருந்து ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆபிரிக்காவிலிருந்து முன்னர் கொமுரோ பிரிவின் அதிமேற்றிராணியாரான கன்ரின் அடிகளாரும் ஆசியாவிலிருந்து பங்களூர் பிரிவு அதிமேற்றிராணியாராக முன்னர் இருந்த லூர்துசாமி அடிகளாருமே நியமனம் பெற்ற இருவருமாவர்.

## பொது மக்கள் கஷ்டம்

அம்பன், சனி

குடத்தனைக்கிராமச்சபைப் பகுதியிலுள்ள அம்பன், நாகர் கோயில், குடத்தனை கரையூருக்குப் பொதுவில் ஒரு கிராமசேவையாளரே பணியாற்றி வருகின்றார். இங்கு வெற்றிடமாக இருக்கும் இரு கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு இதுவரையும் கிராமசேவையாளர் நியமிக்கப்படவில்லை. இதனால் பதில் கிராமசேவையாளர் கஷ்டப்படுவதுடன் பொது மக்களும் கஷ்டப்படவேண்டியுள்ளது

## 'தாய்மொழி மூலம் நடாத்துக'

அம்பன், சனி

சித்த ஆயுள்வேத போதனையை தாய்மொழி மூலம் நடாத்துமாறு கோரும் பிரேரணையை குடத்தனைக் கிராம சபையில் சபைத் தலைவர் வ. துரையப்பா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு சித்த ஆயுள் வேத ஆணையாளருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## பணத்தைத் தொலைத்தார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாநகரசபை நடுக்கட்டும் உத்தியோகத்தர் ஒருவர் சபையில் கட்டுவதற்காகக் கொண்டுவந்த பணத்தில் ஆயிரத்து முந்நூறு ரூபாவைத் தவறவிட்டு திகைத்து நின்ற போது யாழ். மாநகரசபை ஊழியர்கள் தங்களாலியன்ற உதவி செய்து அவரது துயரத்தைப் போக்கமுன்வந்தனர்.

—

## ஆஸ்பத்திரிக் கட்டிடத்தில் நீதிமன்றங்கள்

கோட்டை, ஞாயிறு

நேற்றுமுதல் கேகாலை மாவட்டத்தில் உள்ள பழைய மீவல் ஆஸ்பத்திரிக்கட்டிடத்தில் கேகாலை மாவட்ட நீதிமன்றம், மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஆகியன இயங்கிவருகின்றன. முன்னர் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நீதிமன்றங்கள் இயங்காது என்றும் அறிவிக்கப்பட்டது.

## சீனிக்கப்பல் பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'ஜலகங்கா' என்ற இந்தியக் கப்பல் ஐயாயிரம் தொன் சீனியுடன் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு வந்துள்ளது. சீனிமூடைகளை மிகத் துரிதமாக இறக்குவதில் வீரபாகு கம்பனி நிர்வாகிகளும் ஊழியர்களும் இரவு பகலாக உழைத்து வருகின்றனர். சில தினங்களுக்கு முன் மண்ணெண்ணெய் பெட்ரோலியம் பொருள்களுடனும் ஒரு கப்பல் பருத்தித்துறைக்கு வந்ததும் அவை துரிதமாக இறக்குமதி செய்யப்பட்டதும் தெரிந்ததே.

—

## கழக நிர்வாகிகள்

வேலணை, சனி

அண்மையில் அமைக்கப்பட்ட சரம்பொன் அன்பில் மலர்ந்த மன்றம் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஏ. வஸ்ரின். உபதலைவர்: திரு யோன் நிர்மலநாயகம், செயலாளர்: திரு பி எஸ் கே அன்ரன். தனாதிகாரி: திரு ஆர் இறிஸ்டியோகஸ், மற்றும் 7 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்,

—

## சந்நிதியில் நாளை

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நாளை பகல் வைகாசி விசாகத்தை முன்னிட்டு விசேஷ பூசையும் ஆராதனைகளும் நடைபெறவிருக்கின்றன.

## இடமாற்றம்

பருத்தித்துறை, சனி

காங்கேசன்துறை பட்டினசபையைச் சேர்ந்த திரு. எம். கனகரத்தினம், பதவி உயர்வுடன் யாழ்ப்பாணம் மாநகரசபை வருமான மேற்பார்வையாளராக அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

அம்பன், சனி

கொழும்பு வருமானவரிக் கந்தோரில் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. சி. சபாபதி இம்மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# நேற்று வெங்காயம், இன்று மிளகாய், நாளை கடலை

வெளிநாடுகளிலிருந்து உப உணவுப் பொருட்கள் இறக்குமதி ஒவ்வொன்றாக நிறுத்தப்படுவதும், அதன் பலனாக திடீர் திடீரென்று ஒவ்வொரு பொருளுக்கும் தட்டுப்பாடு உண்டாகி விலைகள் விஷமென ஏறுவதும், யாழ்ப்பாணத்தில் தோட்டம் செய்யும் கமக்காரருக்கு கண்ணாமூச்சி விளையாட்டு காட்டுகின்றன. எந்தப் பயிரை விதைத்தால் அதிக லாபம் அடிக்கலாம் என்று அவர்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். எந்த பொருளுக்கு எந்த நேரத்தில் தட்டுப்பாடு வருமோ என்று அருட்டம் பார்க்க வேண்டியிருக்கிறது. நற்சமயம் கறி சமைப்பதற்கு முக்கியமான இன்ன வெங்காயம், மல்லி, சுடுகு, மிளகு, வெள்ளைப் பூடு எல்லாமே தட்டுப்பாடு வரிசையிலிருக்கின்றன. சில நாட்களுக்குமுன் மிளகாயை கண்ணால் காணமுடியவில்லை அதற்கு முதல் உருளைக் கிழங்கு ஒடிஒளித்தது. சில காலம் பழப்புளி பரலோகம் போயிற்று. காய்கறி வகை விளைந்தால் இன்னோரிடத்தில் வாழையும் மரவள்ளியும் ஒரிடத்தில் கத்தரியும் தக்காளியும் உண்டானால் இன்னோரிடத்தில் வெண்டியும் கீரையும் இப்படியே மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் விளை பொருட்கள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி வந்தன. இன்ன இடத்துக்குப்போனால் இன்னசாமான் நிச்சயமாகக்கிடைக்குமென்று ஜனங்களுக்குத் தெரியும். பொதுச் சந்தையில் இப் பொருட்கள் அனைத்தையும் பெறக் கூடியதாயிருந்தது.

பிற்காலத்தில் மக்களின் உணவு முறைகள் மாறுதலடைந்தன. குரக்கன், சாமை வரகு முதலிய தானியங்களை உண்பது தரம் குறைவான செயல் என்ற தப்பெண்ணம் எப்படியோ அவர்களின் மூளையில் புகுந்து விட்டது இலுப்பைப்பூ அந்நாட்களில் பொன்னுக்கு நிகராயிருந்தது அதைப் பக்குவமாக பொறுக்கி எடுத்து தலைத்து உண்டார்கள் புளியங் கொட்டையை வறுத்து இடி




யில் ஏழைகளின் உணவு என்று சொல்லப்படும் மரவள்ளிக் கிழங்கை இவ்வருடம் காண்பது அரிதாயிருக்கிறது. மரவள்ளித் தோட்டங்களை வேறு பயிர்கள், கூடிய லாபம் தரக்கூடிய பயிர்கள் ஆக்கிரமித்துக் கொண்டன.

மரவள்ளி சீவல் எவ்வளவு தொகையாயினும் வாங்கத் தயார் என்று அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்று சமீபத்தில் தெரிவித்திருக்கிறபடியால் இனிமேல் மரவள்ளித் தோட்டங்கள் மறுபடியும் முளைத்தெழலாம்.

முன்பு, மக்களின் உணவுத் தேவைகளுக்கேற்ப ஊருக்கு ஊர் வித்தியாசமான உணவுப் பயிர்கள் செய்யப்பட்டு வந்தன. ஒரு குறிச்சியில் குரக்கனும் சாமையும் விளைந்தால் இன்னொரு குறிச்சியில் மிளகாயும் வெங்காயமும் ஓரிடத்தில் என்னும் பயறும் த்துஉணவாக்கினார்கள். இப்பொழுது அவற்றை கவனிப்பாரில்லை

பத்து வருடங்களுக்கு முன்பு உருளைக் கிழங்கு இறக்குமதி தடை செய்யப்படலாம் என்ற வதந்தி கிளம்பிய உடனே யாழ்ப்பாண மண்ணிலும் உருளைக் கிழங்கை விளைவிக்கலாம் என்ற உண்மை தோட்டக்காரருக்கு புலனாயிற்று. பலர் உருளைக்கிழங்கை பயிர் செய்யத் தொடங்கினர். அதில் லாபம் நிறைய இருந்தது.

முன்பெல்லாம் தோட்ட நிலங்களில் புகையிலையும் சணலும் தான் காசுப் பயிர்களாயிருந்தன. மற்றவை எல்லாம் உணவுப் பயிர்களே இப்பொழுதோ, மிளகாய் இறக்குமதி தடைசெய்யப்பட்டதோடு மிளகாயும் உருளைக் கிழங்குடன் சேர்ந்து ஒரு முதல் நம்பர் காசுப் பயிராய் விட்டது. இன்றைக்கு தனிப்பட்ட கடைகளில் கட்டுப்பாடு விலைக்கு மிளகாய் வாங்குவது குதிரைக் கொம்பாயிருக்கிறது. பல தோட்டக்காரர் மற்ற எல்லாவற்றையும் விட்டு விட்டு மிளகாய் ஒன்றிலேயே கண்ணும்கருத்துமாய் இருக்கிறார்கள். நல்ல விளைச்சல் கிடைத்து நல்ல லாபம் அள்ள வேண்டுமென்ற கொள்ளை ஆசையில், சிலர் பலவிதமான உரங்களையும் பல விதமான கிருமி நாசினிகளையும் அடித்து மிளகாயை நாசமாக்கிப் போட்டார்கள் என்றும் கேள்வி.

எல்லோரும் மிளகாயையும் உருளைக்கிழங்கையும் ஏராளமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று விரும்பினால் செய்யப்படாது விட்ட மற்றைய பொருட்களுக்கு தட்டுப்பாடு உண்டாகி அவற்றின் விலை உயரும் தானே? அடுத்த வருடம் மிளகாயை விட்டு விட்டு இந்த மற்றைய பொருட்களுக்குத் தாவுவார்கள். இப்படியே இந்த கண்ணாமூச்சி விளையாட்டு நடந்து கொண்டே போகிறது.

இப்பொழுது இரண்டு மூன்று வருடங்களாக உணவுப் பயிர்களுக்கு போட்டியாக வந்திருக்கும் இன்னொரு காசுப் பயிர் வேர்க்கடலை எனப்படும் நிலக்கடலை இந்தியாவிலிருந்து கடலை, கடலைஎண்ணை இவற்றின் வரத்து குறைந்து விட்டதனால் நிலக்கடலைக்கு நல்ல கிராக்கி. அந்தர் ஒன்று 125 முதல் 150 160 ரூபா வரை விற்கிறது. எள்ளும், பயறும், பூசினியும் வத்தகையும் படர்ந்து கிடக்க வேண்டிய வயல் நிலங்களில் இன்று நிலக்கடலை கொடி விட்டுப் பறக்கிறது.

காசுப் பயிர் காசு கொண்டு வரும் என்பது உண்மைதான். அந்தக் காசைக் கொண்டு உணவு வாங்குவதற்கு எங்கே போகலாம்?

-கலப்பை-

கலாநிலைய
கேம்பிறிக்

WRITING PAD
(லெட்டர் பாட்)

5 1/2" X 8 1/2" — 50 தாள்

1. கோடு இல்லாதது சதம் 70
2. கோடு உள்ளது சதம் 95

வியாபாரிகளுக்கு கழிவு கொடுக்கப்படும்.

'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)
கே. கே. எஸ். ரோட், 49 — யாழ்ப்பாணம்.

## 'பண்புதான் நிலைக்கும்'

உடுப்பிட்டி, சனி

"மனிதனை மனிதனாக மதிக்கப் பழகவேண்டும். பலம் பணம், பதவி இவையனைத்தும் என்றும் நிலையானவை அல்ல. பண்பு ஒன்றே நிலை நிற்கக்கூடியது. இதனை நாம் மறக்கக்கூடாது அதே சமயம் பண்பற்ற செயலை எந்நிலையிலும் நாம் ஆதரிக்கக் கூடாது."

இவ்வாறு உடுப்பிட்டித் தமிழ் மன்றத்தின் பத்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் கேட்டுக்கொண்டார்.

இக் கூட்டத்தில் வழக்கறிஞர் திரு. ஏ. வி. சே நீலகண்டன் உடுவை ராஜன் திருவாளர்கள் கவிஞர் கருணை யோகன் சி ஆறுமுகம் திருச்செல்வம் ஜே ஜெக்குமார் பொன் ஜெயராசா ஆகியோரும் பேசினர்.

## அப்பீல் தள்ளுபடி

கோட்டை, சனி

பந்துல பெரேராவின் கொலைவழக்குசம்பந்தமான அப்பீல் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

கொட்டாஞ் சேனையைச் சேர்ந்த சுப்பையா முத்தையா என்று சொல்லப்படுகின்ற தங்கவேலு என்பவர் கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் 1969ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ந் திகதி பந்துல பெரேரா என்பவரைக்கொலைசெய்ததாகக்குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர் அப்பீல் செய்ததைத் தொடர்ந்து நேற்று அப்பீல் தள்ளுபடியானது.

# முஜிபூர் குடும்பத்தோடு காவலில் இருக்கிறாராம்

அகர்தலா, ஜூன் 5

கிழக்குப் பாகிஸ்தான் தலைவர் திரு. முஜிபுர் ரஹ்மான் அவரது குடும்பத்தினருடன் டாக்கா நகரில் அவரது வீட்டுக்கருகில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது

கிழக்குப் பாகிஸ்தானில் போர் ஆரம்பமானதும் பாகிஸ்தான் துருப்புக்களினால் கைதுசெய்யப்பட்ட முஜிபுர் ரஹ்மான் எங்கே இருக்கிறார் என்ற தகவல் எதுவும் கிடைக்காமல் இருந்தது. ஆனால் இப்போது கிடைக்கப்பெறும் செய்திகளிலிருந்து முஜிபுர் தமது குடும்பத்தினருடன் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிகிறது

டாக்கா நகரில் தன்மண்டி என்னுமிடத்திலிருந்த முஜிபுரின் வீட்டை தரைமட்டமாக்கிய இராணுவத்தினர், முஜிபுரையும் அவரது குடும்பத்தினரையும் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் வைத்துக் கைதுசெய்தனர்.

முஜிபுருடன் அவரது மனைவியும் 2 ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் காவலில் இருப்பதாகக் கூறப்பட்டது

சரசாலை கொலை முயற்சி வழக்கு

# 'துவக்கு வெடியினால் காயம் ஏற்பட்டது'

யாழ்ப்பாணம், ஞாயிறு

துவக்கு வெடியினால் சம்புநாதபிள்ளைக்கு காயம் ஏற்பட்டது, நான் சயிக்கிலுக்குப் பின்னால் இருந்தேன். காரியன் ஓடிப்போனதைக் கண்டேன். சயிக்கிலை வேகமாக ஓட்டும்படி சம்புநாதபிள்ளையிடம் சொன்னேன்.

சரசாலை கொலை முயற்சி வழக்கில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 70-ம் ஆண்டு மார்ச் 25ம் தேதி சரசாலையில், கணபதிப்பிள்ளை சம்புநாதபிள்ளையை கொலை செய்ய முயற்சித்ததாக தருமலிங்கம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் எஸ் நாகராசா, புறக்டர் வி யோகேஸ்வரனின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர்க்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் சிவாகணேசன் நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

அட்வகேட் எஸ் நாகராசா குறுக்குவிசாரணை செய்தபோது கந்தசாமி கூறியதாவது: ஆங்கிலத்தில் சாட்சியமளிக்க விரும்பவில்லை. தமிழில் சாட்சியமளிக்க விரும்புகிறேன். ஆங்கில அறிவினும் பார்க்க எனக்கு தமிழ் அறிவுகூட இருக்கிறது.

வழ: சுந்தரம் கடைக்கும், பொன்னுத்துரை கடைக்குமிடையில் மற்றைக்காணிகள் உண்டா?-இல்லை

வழ: சம்புநாதபிள்ளையை எப்ப தொடங்கி தெரியும்?-இளமை முதல்

வழ: இளமையில் சிநேகிதம்?-இல்லை, அறிமுகம்.

வழ: சைக்கிளில் ஏற்றிச் செல்லுமளவு சிநேகிதமாக இருந்தீர்?- எங்கள் ஊரில் எவரும் சயிக்கிளில் ஏற்றிக் கொண்டு போவார்கள்,

வழ: சம்புநாதபிள்ளையுடன் இக்கோர்ட்டில் சாட்சியமளித்தது பற்றிப் பேசினீரா?-இல்லை

வழ: கோடு முடிந்தபின் சம்புநாதபிள்ளையை சந்தித்தீர்?- ஆம்

வழ: உமது மகனை அவரின் சகோதரி மகளுக்குத் திருமணம் செய்யப் பேச்சு நடந்ததா? இல்லை

வழ: உமது மகன் உமது விருப்பத்திற்கு மாறாக கலியாணப்பதிவு செய்து கொண்டார்?-ஆம்

வழ: உமது மகன் மனைவி வீட்டில் இருக்கவில்லை?-ஆம். எனது வீட்டில் இருக்கிறார்

வழ: அவரை சம்புநாதபிள்ளையின் சகோதரி மகளுக்குத் திருமணம் பேசினீர்?-கலியாண எழுத்துத் தள்ளாமல் ஒன்றும் செய்ய முடியாது

கலியாண எழுத்து நடந்தது முதல், மகன் உம்முடன் இருக்கிறார்?-ஆம்

வழ: அந்தப் பெண் வீட்டில் உமது மகன் இருப்பது உமக்கு விருப்பமில்லை?-ஆம்

வழ: ஒழுங்கை முகப்பிற்கு வந்தபோது எதிரியை துவக்குடன் கண்டீர்?-ஆம்

வழ: ஒழுங்கையைத் தாண்டிப் போகும் போது எதிரியைப் பார்த்தீர்?-ஆம்

விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது

—

## 5 லட்சம் லாபம்

கோட்டை, சனி

இலங்கைக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கடந்த பன்னிரண்டு மாதங்களில் 5 லட்சம் ரூபா லாபமாகப் பெற்றுள்ளது.

கடந்த மே மாதம் வரையுள்ள பன்னிரண்டு மாதங்களிலும் மொத்தம் எழுபத்தொரு கூட்டு மொத்த விற்பனவு ஸ்தாபனங்கள் இயங்கி வந்ததாகவும் இவை 5 லட்சம் ரூபா லாபத்தை அரசாங்கத்துக்கு பெற்றுக் கொடுத்துள்ளது எனவும் கூறப்படுகிறது.

இலங்கை பூராவும் 138 விற்பனவுச் சாலைகள் இயங்கி வந்தன என்றும் இவற்றுள் 46 விற்பனவுச் சாலைகளை முன்னைய அரசாங்கம் மூடிவிட்டது எனவும் கூறப்படுகிறது.

தொழில்நுட்பக்கல்லூரி

## மாலைவகுப்புகள் ஒத்திவைப்பு

கோட்டை, சனி

கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்கள் தொழில் நுட்பக்கல்லூரிகள் பொறளை ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் ஆகியன நேற்று மறுபடியும் ஆரம்பமாகியுள்ளன.

சகல தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடைபெற்று வந்த மாலை வகுப்புக்கள் அடுத்த அறிவித்தல்வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

## ரதோற்சவம்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில் தேர்த்திருவிழா நாளை பகல் 11 மணியளவில் ஆரம்பமாகிறது 8-ம் திகதி தீர்த்தோற்சவமும், 9-ம் திகதி திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவிருக்கின்

# ஐரோப்பிய பொதுசந்தையும் ஆசிய நாடுகளும்

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் இடம் பெறுவதற்கு இதுவரைகாலமும் இருந்துவந்த தடைகள் சமீபத்தில் நீக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாகத் தற்போது நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகளும் மேற்கொள்ளப்படும்நடவடிக்கைகளும் தொடர்ந்து நீடிக்குமானுல் 1973-ம் ஆண்டின் முற்பகுதியில் பிரிட்டன் பொருளாதார ரீதியில் ஐரோப்பிய மயமாகிவிடும் என நாம் எதிர்பார்க்கலாம். இது பிரிட்டனுக்கும் குறிப்பாக ஐரோப்பிய பொதுச்சந்தையில் கூட்டுச் சேர்வதை விரும்பாத அபிவிருத்தியடைந்துவரும் இலங்கை இந்தியா போன்ற பொதுநல அமைப்பு நாடுகளுக்குமிடையில் புதிய தொரு தொடர்பை ஏற்படுத்தும். தற்போதைய சூழ்நிலையில் இந்த மாற்றம் அபிவிருத்தியடைந்துவரும், இந்த நாடுகளுக்கு நன்மை பயப்பதாக இருக்காது. ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் அங்கத்துவம் பெற்றதும் ஐ நா. வர்த்தக அபிவிருத்தி ஸ்தாபனம் ஆசிய பொதுநல அமைப்பு நாடுகளின் வர்த்தகப் பிரச்சினைகளைக் கவனித்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இந்நாடுகளின் பிரமுகர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனைப் பொறுத்தவரை ஏற்கனவே அது பொதுநல அமைப்பு நாடுகளிடமிருந்து இறக்குமதிசெய்யும் ஜவுளிகளுக்கு 15 வீதம் தீர்வைவிதிக்கத் தீர்மானித்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா போன்ற முன்னேற்றமடைந்த நாடுகள் இப் பொருட்களின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடுவிதித்துள்ளபோதும் நீண்ட காலமாகப் பிரிட்டன் தீர்வையின்றி இறக்குமதியை அனுமதித்திருந்தது.

மேற்கு ஐரோப்பா அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களைப் பொறுத்தளவில் மேற்கொண்டுவரும் தனக்குச் சாதகமான பொதுத் திட்டம் அரிதமற்றதும் அதே வேளையில் உளோபத்தனமானதுமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் ஐரோப்பிய பொதுச் சந்தையிலிருந்து தாராளமனப் பான்மையை இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் எதிர்பார்க்க வியலாது. ஐ நா வர்த்தக அபிவிருத்தி ஸ்தாபனம் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வது காலதாமதமானால் ஆசிய நாடுகள் காலந்தாழ்த்தாது ஐரோப்பிய பொதுச் சந்தையுடன் குறுகியகால வர்த்தக ஒப்பந்தங்களைத் தங்களுக்குச் சாதகமான வகையில் செய்து கொள்ளவேண்டும். இந்தக் குறுகியகால ஒப்பந்தங்கள் ஐ நா வர்த்தக அபிவிருத்தி நிறுவனம் மேற்கொள்ளும் நீண்டகால ஒப்பந்தங்களுக்குப் பொருந்தத்தக்க வகையில் செய்யப்பட வேண்டும்.

("இந்து" பத்திரிகை)

# உதிரிப்பாகங்கள் இறக்குமதி

கோட்டை, சனி

இம்மாதம் இலங்கைப் போக்குவரத்துச்சபை 25 லட்சம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யவிருக்கிறது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உதிரிப்பாகங்களோடு ஐந்து பஸ் இருபத்தெட்டு தட்டுக்கள் ஆகியவையும் இறக்குமதி செய்யப்படும். தட்டுக்கள் ஒவ்வொன்றும் எழுபத்தைபாயிரம் ரூபா பெறுமதியாகும். இவை வெரகரா இலங்கைப் போக்குவரத்துச்சபை தலைமைக்காரியாலயத்தில் வைத்துக் கையளிக்கப்படும்.

# பரிசுத்த பாப்பரசர் பதவி துறப்பாரா?

ரோம், ஜூன் 5

பரிசுத்த பாப்பரசர் ஆருவது சின்னப்பர் விரைவில் பதவி துறக்கவிருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. அவர் பதவி துறப்பதற்கு இருவித காரணங்கள் கூறப்படுகின்றன. பாப்பரசர் பதவியை இளவயதினர் வகிக்க வேண்டுமென்ற இவரது புரட்சிகரமான கொள்கையும் உடல்நலக் குறைவுமே இவர் பதவிதுறக்கக் காரணமாயிருக்குமெனக் கூறப்படுகிறது. சின்னப்பாப்பரசர் பதவி துறக்கும்பட்சத்தில் பதவிதுறந்த பாப்பரசர்கள் வரிசையில் இவர் இரண்டாவது இடத்தை வகிப்பார். முன்பு 5-வது செலஸ்டின் பாப்பரசர் தமது பாப்புப் பதவியைத் துறந்தார்

பரிசுத்த பாப்பரசர் அடுத்த ஆண்டில் தமது பதவியைத் துறப்பார் எனக் கூறப்படுகிறது.

# ரூபா 120 லட்சம்

கோட்டை, சனி

கைத்தொழில் விஞ்ஞான, வெளிவிவகார அமைச்சின் கீழியங்கும் கூட்டுத்தாபனங்களுக்கு 120 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் சமீபத்திய கணக்கெடுப்பிலிருந்து தெரிய வந்துள்ளது.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளாலேயே மேற்படி கூட்டுத்தாபனங்களுக்கு கூடிய நஷ்டமேற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. உற்பத்திக் குறைவாலும் நஷ்டமேற்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனங்களின் அலுவல்களை மீண்டும் சகஜநிலைக்குக்கொண்டுவந்து உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தங்கள் பூரண ஒத்துழைப்பை அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

# அடையாள அட்டைகளுக்கு கட்டணம் ?

கோட்டை, சனி

18 வயதுக்கு மேற்பட்ட யாவருக்கும் இலவசமாக அடையாள அட்டைவழங்குவது குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்கிறது.

முன்னர் அரசாங்கம் இந்த அடையாள அட்டைகளை இலவசமாக விநியோகிப்பது எனத் தீர்மானித்தது. தற்போது இந்த அட்டைகளை விற்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்க அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு அடையாள அட்டையும் 2 ரூபாவிலிருந்து 4 ரூபாவுக்குள்ளான விலைமதிப்புடையதாகவிருக்கும் எனவும் மேற்படி அதிகாரி தெரிவித்தார்

18 வயதுக்கு மேற்பட்ட யாவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட பின்னர் எவரும் அடையாள அட்டையில்லாது இருப்பின் அவர் சட்டவிரோதமாகக் குடியேறியவராகவே கருதப்படுவர்.

# சகல ஆசிரியர்க்கும் சேவைக்கால பதிவேடு

கோட்டை, சனி

சகல ஆசிரியர்களுக்கும் சேவைக்காலப் பதிவேடுகள் வழங்கப்படவுள்ளது. இத்தகவலைக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பதிவேடுகளில் ஆசிரியர்கள் சம்பந்தமான இடமாற்றம், பதவிஉயர்வு, இளைப்பாற்றுப்பணம் ஆகியன சம்பந்தமான விபரங்களை சேர்த்து வைக்க உதவியாக இருக்குமென அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ். நகரில் பரிதாபசம்பவம்

# மனைவியின் பிரிவை தாங்காத இருவர் சுருக்கிட்டு தற்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

குடும்பத்தகராறைதொடர்ந்து பிள்ளைகளுடன் மனைவிமார் பிரிந்துசென்றதைத் தாங்கமுடியாமல் யாழ்ப்பாணத்தில் இருவர் கழுத்தில் சுருக்கிட்டுதற்கொலைசெய்து கொண்டனர்.

திட்டியைச் சேர்ந்த செபியல் வீரக்கோன்(40 வயது) மனைவியுடன் சண்டைபிடித்ததைத் தொடர்ந்து மனைவி பிள்ளைகளை கூட்டிக்கொண்டு ஊர்காவற்றுறை சென்றுவிட்டதாகவும் இதனைத் தாங்கமுடியாத வீரக்கோன் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

அரியாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி அடிக்கடி மனைவியுடன் சண்டை பிடித்துவந்ததாகவும் மனைவி மக்களுடன் கிளிநொச்சிக்கு சென்றதைத் தொடர்ந்து இரு நாட்கள் சாப்பிடாமல் தனித்து வீட்டில் தூக்கிட்டு சின்னத்தம்பி தற்கொலை செய்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது

இரு மரணவிசாரணைகளையும் நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு எஸ் இராசநாயகம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்,

# வாலிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாப்பாட்டினுல் ஏற்பட்ட தகராறினுல் வேலையற்றிருந்த 21 வயது வாலிபர் நச்சுத்திராவகமருந்தி தற்கொலைசெய்து கொண்டார்

கண்டுக்குளியைச் சேர்ந்த வைத்திலிங்கம் செல்வநாயகம் என்றவாலிபரின் மரண விசாரணையின் போது மேற்கண்டவிபரம் தெரிய வந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினுர் விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்,

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நீர் விநியோக திட்டம்

கோட்டை, சனி

இரத்தினபுரியில் ஏறக்குறைய 75 லட்சம் ரூபா செலவில் புதிய நீர் விநியோகத் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்கவிருக்கிறது.

இத்தொகையுள் 70 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை அரசாங்கமும் மிகுதிப்பணத்தை இரத்தினபுரி மாநகர சபையும் செலுத்துமென இரத்தினபுரி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். இந்த நீர்விநியோகத்தினுல் ஆஸ்பத்திரிகள், அலுவலகங்கள் யாவும் பெரும் நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரான்சுக்கு ஏற்றுமதி

கோட்டை, சனி

இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 10 லட்சம் ரூபா பெறுமதிவாய்ந்த கடல் உணவுகளை பிரான்ஸ் அரசாங்கம்வாங்க முன்வந்துள்ளது.

அமெரிக்காவிலிருந்தும் இலங்கைக் கடல் உணவு வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

வேலணை

# பெரியபுலம் ரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் கோவில் ரதோற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது. தூர இடங்களிலிருந்து ரதோற்சவத்திற்கு வரும் அடியார்களின் வசதிக்காகப் பஸ் பிரயாண ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# ஜூலையில் ஆரம்பமாகும்

கோட்டை, சனி

கொழும்பு பல்கலைக்கழகங்களில் நடைபெறும் விசேட விஞ்ஞான வகுப்புக்கள் வருகிற ஜூலை மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. மற்றைய உயிரியல், பொறியியல் வகுப்புக்கள் ஜூலை மாதம் 16-ந் திகதி ஆரம்பமாகும்

பேராதனைப்பல்கலைக்கழக விஞ்ஞான, உயிரியல் வகுப்புகள் வருகிற ஜூலை மாதம் 16ந் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

கட்டுப்பெத்தை - வித்தியோதய, வித்தியாலங்கார விஞ்ஞான வகுப்புகள் ஜூலை மாதம் 31-ந் திகதி ஆரம்பமாகும்.

# அகதிகள் முகாம்களை இந்திரா சென்று பார்த்தார்

கல்கத்தா, ஜூன் 5

கிழக்கு வங்க அகதிகளுக்கு கிடைக்கும் உதவி, பிரச்னையின் அளவுக்குத் தகுந்ததாக இல்லையென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று சொன்னுர்.

மேற்கு வங்கத்துக்கு இன்று விஜயஞ்செய்த பிரதமர் நிருபர்களுடன் பேசினுர். அப்போதே இப்படிக் கூறினுர்.

"கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகளின் பிரச்சினை ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கடுமையான மோசமான நிலைமை என்றும் அவர் தெரிவித்தார்

"நாம் இதற்காகக் கவலைப்பட்டு அவசரமானமுடிவுகளை எடுத்துவிடக் கூடாது" என்று அவர் கூறினுர்,

அகதிகள் முகாம்களை 6 மணி நேரம் சுற்றிப் பார்வையிட்ட பிரதமர் மேற்குவங்க முதலமைச்சரையும் துணைமுதலமைச்சரையும் சந்தித்துப் பேசினுர்.

# விமானத்தில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தத்தமது பகுதிகளில் பயங்கரவாதிகள் சரணடைவதற்கான கடைசிச்சந்தர்ப்பம்பற்றிய விளம்பரங்களை அரசாங்க அதிபர்களும் மாவட்ட இணைப்பு அதிகாரிகளும் வெளியிடுவார்கள்.

தத்தது பகுதிகளில் செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள்பற்றியும் அபிவிருத்திபற்றியும் தெரிவிக்குமாறும் அரசாங்க அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர்.

# போதனை ஆரம்பம்

உடுப்பிட்டி, சனி

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் 3-ம்திகதி மீண்டும் வகுப்புகள் ஆரம்பமாயின. பகல் நேரப் போதனை வகுப்புகள் மட்டுமே தற்பொழுது நடைபெற்று வருகின்றன மாலை நேரப் போதனை வகுப்புகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன

# அகதிகளுக்கு விமானத்தில் மருந்து

நியுயோர்க், ஜூன் 5

கிழக்கு வங்க அகதிகளுக்கு மருந்துகளை ஐ நா சர்வதேச குழந்தைகள் ஸ்தாபனம் அனுப்பி வைக்கவுள்ளது. ஜெட் விமானமூலம் இந்த மருந்துகள் கிழக்கு வங்க அகதிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. 30 டன் மருந்துகள் வரும் செவ்வாய்க்கிழமை வந்து சேரும்.

# பல்கலை தொழில் நுட்பக் கழகம்

உடுப்பிட்டி, சனி

யாழ். தொழில்நுட்பக்கல்லூரி 'பொலிரெக்' காகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது கொக்குவிலில் இயங்கிவரும் யாழ். தொழில்நுட்பக்கல்லூரி இனிமேல் கொக்குவில் (பொலிரெக்) பல்கலைத் தொழில் நுட்பக்கல்லூரி என்று அழைக்கப்படும்.

பளையில் இயங்கிவந்த பொலிரெக் தற்போது யாழ் தொழில் நுட்பக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. பளையில் விவசாயத்திற்கான டிப்ளோமாப் பிரிவு மட்டுமே தொடர்ந்திருக்கும்.